# இந்திய அரசியல்வாதிகளை சாடுகிறார் 'அன்ரன்'

(லண்டன்)
ராஜீவின் கொலைக்கும் புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை. போதிய ஆதாரம் இல்லாமல் இப்பழியைப் புலிகளின் தலையில் சுமத்தி விட இந்திய அரசியல்வாதிகள் முற்படுவது கண்டு புலிகள் மிகுந்த ஏமாற்றம் அடைவதாகப் புலிகளின் பேச்சாளர் திரு. அன்ரன் பாலசிங்கம்

[4ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL' TAMIL DAILY'

மலர் 3[illegible] வைகாசி 16 துல்ஹஜ்தா 15 இதழ் 108
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 30-05-1991'

## வவுனியா தாக்குதலில் இரண்டு இராணுவம் பலி

(வவுனியா)
வவுனியாவில் கொக்கு வெளிச்சந்தியிலுள்ளமுகாமிலிருந்து நொச்சிமோட்டை நோக்கி வந்த இராணுவத்தினர் மீது நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 2 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே பலி

(4ம் பக்கம் பார்க்க]

## நள்ளிரவு முதல் மீண்டும் தாக்குதல்

(கொழும்பு)
இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கை மீண்டும் நேற்று நள்ளிரவுமுதல் ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 3 நாட்களாக

[4ம் பக்கம் பார்க்க]

## ★ பலதரப்பிலும் முயற்சி;

# இலங்கை இனப்பிரச்னை தீர்வில் புதிய சூழ்நிலை தோன்றலாம்!

(கொழும்பு)
இலங்கை இனப்பிரச்னைக்கான தீர்வு குறித்து ஆராயும் ஓர் முதற்கட்ட முயற்சியாக இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஓர் நல்லெண்ணத் தொடர்பு ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகரித்திருப்பதாக கொழும்பு வட்டாரங்களிலிருந்து நம்பகமாகத் தெரியவருகிறது.

இதற்கான முயற்சிகள் தற்போது பல தரப்பட்ட மட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நல்லெண்ண முயற்சியின் தொடர் அம்சமாக சில முக்கிய சந்திப்புகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் கூறிய அவ்வட்டாரங்கள் அது எவ்வாறானதாயிருக்குமென தெரிவிக்கவில்லை. (சி)

## இந்தியா முழுவதிலும் புகைப்படம் பிரசுரம்

(புதுடில்லி)
திரு. ராஜீவைக் கொன்றதாக கருதப்படும் பெண்ணினதும், மற்றொரு ஆணினதும் புகைப்படம் இந்தியா முழுவதும் வெளியிடப்பட்டுள்ளது

இவ்விருவரதும் புகைப்படங்களும் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பற்றி உடனடியாக தகவல் தருமாறும் பொலிஸார் கோரியுள்ளனர். இவ்விருவரதும் பெரிய புகைப்

(4-ம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் தலைவராக நரசிம்மராவ் தெரிவு

(புதுடில்லி)
இந்திரா காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக திரு. திரு. பி. வி. நரசிம்மராவ் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை புதுடில்லியில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் திரு.

(4ம் பக்கம் பார்க்க)

## ராஜீவை கொல்ல முயன்றவர் ராஜீவ் கொலைக்கு கண்டனம்

[கொழும்பு]
1987ம் ஆண்டு இலங்கையில் வைத்து திரு. ராஜீவ் காந்தியை. கொல்லமுயன்ற கடற்படை சிப்பாய் தற்போது ராஜீவ் கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

ரோகண டி சில்வா என்ற இச்சிப்பாய் இந்திய் இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட வந்த திரு. ராஜீவ் நாடு திரும்பும் போது நடந்த அணிவகுப்பில்

(4-ம் பக்கம் பார்க்க)

## பணம் வருகிறது

(யாழ்ப்பாணம்)
குமணசுப்பலில் மூன்றரைக் கோடி ரூபா திரவப்பணம் யாழ். மக்கள் வங்கிக்கு வந்துள்ளது. (153)

## பிரியங்காவுக்கு காங்கிரஸ் அழைப்பு

(சென்னை)
இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேரும்படி செல்வி பிரியங்கா காந்திக்கு இந்திரா காங்கிரஸ் கட்சியின் இளைஞர் அணி அழைப்பு விடுத்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல்

(திருகோணமலை)
திருமலை மாவட்டத்தில் கட்டைபறிச்சான் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் கூனித்தீவு பகுதியினைச் சுற்றிவளைத்து 4 தமிழ் மக்களை கைதுசெய்து பலவேறு சித்திரவதைக்குள்ளாக்கினர்.

இ. ஜெகசோதீஸ்வரன்

(4ம் பக்கம் பார்க்க)

## ஐந்து படையணிகள் தமிழகம் விரைவு

(சென்னை)
தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு ஐந்து பாதுகாப்புப் படை அணிகளை அனுப்பி வைத்துள்ளது.

தமிழ்நாடு அரசு, மத்திய அரசைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்கத் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும்

[4ம் பக்கம் பார்க்க]

## யார் அந்தப் பெண்? இதுவே முதல் புலனாய்வு

(புதுடில்லி]
''திரு. ராஜீவ் காந்தியின் கொலை பற்றி புலன்விசாரணை நடத்தும் சிறப்புக் குழுவின் முதலாம்படி மனித குண்டாக செயற்பட்ட பெண் இன்னார் என்பதை கண்டறிவதேயாகும்.''

[4ம் பக்கம் பார்க்க]

## ஜூன் 20க்குமுன் கூட வேண்டும்

[புதுடில்லி]
இந்தியாவின் 10வது மக்களவை ஜூன் மாதம் 20ம்திகதி அல்லது அதற்கு முன் கூட வேண்டுமென ஜனாதிபதி வெங்கட்ராமன் அறிவித்துள்ளார்.

## இலங்கையில் விசாரணை நடத்த இந்திய புலனாய்வு குழு வருகிறது

(புதுடில்லி)
ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு 'இந்திய புலனாய்வுக்குழு' ஒன்று விரைவில் இலங்கை வரவிருக்கிறது.

மேற்படி குழு இலங்கை வந்து விசாரணைகளை மேற்கொள்ளவிருக்கிறதென்ற தகவலை இலங்கை அரசாங்கத்துக்கு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் மூலம் இந்திய அரசு தெரிவித்திருக்கிறது. யார் மீது சந்தேகம் கொண்டு இப் புலனாய்வுக்குழு இலங்கையில் விசாரணை நடாத்த வருகிறதென்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## இந்திய அரசியலில் பரவலாக உண்ணாவிரதம்

(சென்னை)
தமிழ் நாட்டில் 234 சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் 39 மக்களவைத் தொகுதிகளிலும் போட்டியிடும் தி. மு. க. வேட்பாளர்களும் தேசிய முன்னணி தேசிய வேட்பாளர்களும் நேற்று காலை 8 மணிக்கு உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்

(4ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (ஆண்டு - 5)

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (மூன்ருவது) 2-6-91 ஞாயிறு மு. ப. 8-00 / மு. ப. 10-30, 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பி.ப. 4-00 மக்கள் வைத்தியசாலை முன்பாக, குளப்பிட்டி – ஆனைக் கோட்டை வீதியில் நடைபெறும். பதிவு செய்யவும். (Paper Class) ஆரம்பமாகியுள்ளன. ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.

(சி-4770)


# பொதுசன மாதாந்த உதவித்திட்டம் ஜனசவிய திட்டத்துடன் இணைக்க முடிவு

(சித்தன்கேணி)

ஜனசவியத் திட்டத்தையும், பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்கும் திட்டத்தையும் ஒருங்கிணைப்பதற்கு அரசாங்கம் கொள்கையளவில் முடிவுசெய்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை சமூக சேவைப் பணிப்பாளர் திரு. என். டபிள்யூ. ஈ. ஈ. விஜவன்தா மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக சுற்று நிருபம் ஒன்றை நாடெங்கிலுமுள்ள உதவி அரசாங்க அதிபர்களுக்கு சமூக சேவைப் பணிப்பாளர் அனுப்பிவைத்துள்ளார்.

இச்சுற்றுநிருபத்தில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் தற்போது மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுடைய விபரங்கள், மாதாந்த உதவிப்பணம் பெறும் விதவைகள், ஊனமடைந்தவர்களின் விபரங்கள், மாதாந்த உதவிப்பணம் பெறத் தகுதியானவர்களுடைய விபரங்கள், தொழில் ஏதும் செய்யக்கூடிய மாதாந்த உதவிபபணம் பெறுபவர்களின் விபரங்கள், தொழில் செய்யக்கூடிய குடும்ப அங்கத்தவர்களைக் கொண்டவர்களுடைய விபரங்கள், தொழில் பயிற்சி கொடுத்த பின்பு தொழில் செய்யக்கூடியவர்களின் விபரங்கள் ஆகியவற்றை திரட்டி அனுப்பி வைக்குமாறு சகல உதவி அரசாங்க அதிபர்களையும் சமூக சேவைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (137)

## விளையாட்டு போட்டி

[உடுவில்]

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலைவருடாந்தஇல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை 31ம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் திரு. இ. வல்லிபுரம் தலைமையில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் உ. அ. அதிபர் திரு. க. கனகரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக மருதனார்மடம் கல்வியதிகாரிதிரு. எஸ். ரட்ணராசா, உடற் கல்வி வட்டாரக்கல்வியதிகாரி திரு. என். நாகமணி, நவாலி கொத்தணி அதிபர் திரு ஐ. மனோகரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (109]

## ஆயிரம் ரூபா கள்ள நோட்டு கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஆயிரம்ரூபா கள்ளநோட்டு புழக்கத்தில் இருப்பதனை கிரான்டபாஸ்பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

இது சம்பந்தமாக 4 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் முக்கிய நபர் ஒருவரை தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளதாகவும் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [க]

## ஜெனரேட்டர் பழுதடைந்ததால் யாழ். ஆஸ்பத்திரிக்கு போதிய மின்சாரம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் மின்சாரம் வழங்கும் ஜெனரேட்டர் பழுதடைந்ததால் அன்றாடதேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதியளவு மின்சாரம்கிடைக்காமல் இருப்பதாக யாழ்போதனாவைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தற்போது தற்காலிகமாக வழங்கியுள்ள ஜெனரேட்டரினால் எமக்குத்தேவையான மின்சாரத்தை பெற முடியவில்லை. இதனால் அன்றாடம் நடைபெறும் சில வேலைகளை இடைநிறுத்தவேண்டியுள்ளது.

பழுதடைந்த எமது ஜெனரேட்டரின் உதிரிப்பாகங்களை கொழும்புசென்றுள்ளகப்பலில் அனுப்பியுள்ளோம். அவை அங்கு திருத்தம் செய்து பின்பு இங்கு கொண்டுவந்து பொருத்தியபின்பே முழு அளவிலான மின்சாரம் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.. (வி]

## உதைபந்தாட்டம்: அரைஇறுதி ஆட்டங்களுக்கு நான்கு கழகங்கள் தெரிவு

[யாழ்ப்பாணம்]

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் விளையாட்டுக்கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும், உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில், நான்கு விளையாட்டுக்கழகங்கள் அரைஇறுதியாட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அரை இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன்கழகம், சென். ரேக்ஸ் கழகத்தை நாளை வெள்ளிக்கிழமை மோதும்.

மற்றொரு அரைஇறுதியாட்டும், அடுத்த மாதம் 3-ம் திகதி நடைபெறும், இப் போட்டியில் கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென் மேரிஸ் கழகம் மோதும்.

### பாடும்மீன் வெற்றி

பாடும்மீன் கழகத்துக்கும், பாஷையூர், சென். அன்ரனிஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற, இப் போட்டியில், பாடும்மீன்கழகம் 1-0 கோலால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (வி)

## வெற்றி தோல்வி இல்லை

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி முதலாம் பிரிவு கிரிக்கெட் கோஷ்டிக்கும் ஷப்ரூ நிதி நிறுவனக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இடையில்யாழ்.பரி.யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

## தொழிலாளர்களுக்கு வெளிநாடுகளில் வேலைபெற முயற்சி

[கொழும்பு]

இலங்கைத் தொழிலாளர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கும் முயற்சி விரைவில் மேற்கொள்ளப்படும்.

மேற்படி தகவலை தொழில் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா வெளியிட்டார்.

குவைத் உட்பட பல நாடுகளில் இருந்து திரும்பியோருக்குப் பயிற்சியளிக்கவும் வேலை வாய்ப்புப் பெற்றுக்கொடுக்கும் முகமாகவும் தாம் பேச்சுவார்த்தை நடாத்தவிருப்பதாகவும் தெரிவித்தார்.

## திருமுறைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றத்தின். திருமுறைப்பெருவிழா இன்று ஆரம்பமாகின்றது.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் மூன்று நாட்களுக்கு நடைபெறும் இவ்விழா இன்றும், நாளையும், அருள்மிகு சட்டநாதர் ஆலயத்திலும், சனிக்கிழமை, நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்திலும் நடைபெறவுள்ளன. (வி)


### 1-வது பிறந்ததின வாழ்த்து

#### செல்வன் உருத்திரசிங்கம் கோபிநாத்

காரைநகர் கோவளத்தைச் சேர்ந்த உருத்திரசிங்கம் வசந்தகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கோபிநாத் (கோபிநா) தனது முதலாவது பிறந்தநாளை [30-05-91] இன்று கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணமார், அக்காமார், மைத்துனர்மார், மைத்துனிமார் மற்றும் உறவினர்கள் காரைநகர் மணற்பிட்டி முருகன் அருளால் வாழ்க என வாழ்த்துகின்றார்கள். (சி 4181)


## மடு - சங்குப்பிட்டி போக்குவரத்து சேவை

[பூநகரி]

மன்னார்ப் பயணிகளின் போக்குவரத்து நலன்கருதி மீண்டும் கடந்த 25-ம் திகதி தொடக்கம் சங்குப்பிட்டியில் இருந்துஇரவு 9 மணிக்கும் மடுவில் இருந்து மாலை நாலு மணிக்கும் போக்குவரத்துச் சேவை நடைபெற்று வருகின்றது. இதனால் அரச, தனியார் துறை ஊழியர்கள் கஷ்டம் இன்றி போக்குவரத்துச் செய்யக்கூடியதாக உள்ளது. (23)

## "ஐக்கியத்தின் மூலம் கிராம அமைப்பை உருவாக்கலாம்"

(அரியாலை)

''தீவுப் பகுதியிலிருந்து பாதிக்கப்பட்டநிலையில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த ஒரு பகுதி மக்களை யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் வைத்துப் பராமரித்து வருகின்ற பணியை கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலையம் மேற்கொண்டிருப்பது பாராட்டுதற்குரியதாகும்''.

இவ்வாறு கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற சனசமூக நிலையத்தின் விசேட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டுபேசிய யாழ்.மாநகர சனசமூக நிலைய சமாஜ நிர்வாக உறுப்பினரும், சோலைபுரம் கவிபாரதி சனசமூகநிலையத்தலைவருமான திரு.பொன். பழனிச்சாமி பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு. கா. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்; சனசமூக நிலையங்கள் கிராமமக்களிடையே ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் வளர்த்துவருகின்றன. இந்த ஐக்கியத்தின் மூலமே சிறந்த கிராம அமைப்பைநாம் ஏற்படுத்தமுடியும். சமூகமுன்னேற்றத்திற்கு கல்வி மிகவும் முக்கியமானது.இதனைப்பேணி வளர்க்க சனசமுக நிலையம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

## சிரமதானப் பணி

[கிளிநொச்சி]

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பெரியகுளம் கட்டைக்காடு மூத்தவிநாயகர் ஆலய பாடசாலைக் காணி உதவி அரச அதிபர் சதா. தனபாலசிங்கம் தலைமையில் சிரமதானம்மூலம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

புளியம்பொக்கணை சிரமதான சபையினரும், பழைய வட்டக்கச்சி கிராம முன்னேற்றச் சங்கத்தினரும் சிரமதானத்தில் கலந்து கொண்டனர். [83]


### CITY CLINICAL CONSULTATION

### Apparantist of Pharmacist

கொழும்பு மருத்துவக் கல்லூரிச் சபையினுல் நடாத்தப்படும் PHARMACIST வெளிவாரிப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோருக்கான பாடநெறி வகுப்பு 07-06-91 ல் ஆரம்பம்

தகைமை: G. C. E. (O/L) பரீட்சையில் ஆங்கிலம், உடனலவியல், பொதுவிஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தி.

வைத்தியக் கல்லூரிச் சபையினுல் பயிலுனருக்கான பதிவு, பதிவுசெய்யப்பட்ட மருந்தாளரினுல் [MASTER PHARMACIST] செய்து தரப்படும்.

ஏனைய விபரங்கட்கு-

07-06-91 ற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

முகாமையாளர்

**C. C. C. CLINIC**

514/16 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

[சி 4782]


## கல்விரீதியானமுகாமைத்துவ பயிற்சி அவசியம்"

(யாழ்ப்பாணம்)

கல்வி நிறுவனங்களில் கடமையாற்றும்கல்வி ஆளணியினர்க்கு முகாமைத்துவ பயிற்சியை அளித்து அவற்றை நற்பலன் அளிக்கக்கூடிய கல்வியாளருக்கு பயன்தரு நிறுவனமாக மாற்றுவதே இந்நிலையத்தின்முக்கியநோக்கமாகும்.

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் யாழ். கல்வித்திணைக்களத்தில் யாழ். மாவட்ட முகாமைத்துவ திறப்பு விழாவின் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

சிக்கல் உள்ள நிர்வாக முறைக்கு அவசரத் தீர்வைக் காண்பது அவசிவம். தீர்வுக்கு கல்வி ஆளணியினர் நவீன முகாமைத்துவ திறன்கொள்ள வேண்டும். அப்படியானவர்களுக்கு இந்த முகாமைத்துவ நிறுவனத்தால் பயிற்சி அளிக்கப்படும்.

மாணவர்கள் நாம்அளிக்கும் கல்வி போதியனவாக உவ்ளதா என சந்தேகப்படுகிறார்கள். அந்த மாணவர்களை நாம் ஏமாற்ற முடியாது. இவர்களுக்கு கல்வி ரீதியான முகாமைத்துவ பயிற்சி அவசியமாகியுள்ளது. இப்பயிற்சியை குறுகிய காலத்தில் அளிக்கும் பணியையேஇம்முகாமைத்துவ நிலயம் கொண்டுள்ளது. [152]

## பல வீடுகள் தரைமட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் நடவடிக்கையினால் சரவணையில் பல வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் தொடர்ந்து நடைபெறும் இராணுவ நடவடிக்கையால் மேலும் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

இங்குள்ள வீடுகளில் இருந்த பல பெறுமதியான பொருட்களும் காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியிலுள்ள கா.பசுபதிப்பிள்ளை, க. செல்லத்துரை, சி. செல்வராஜா, கா. கணபதிப்பிள்ளை, அ. தெட்சணாமூர்த்தி, சு. சோமசேகரம், ஆ. கிருஷ்ணன் போன்ற பலரின் கல்வீடுகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. [152]

## எண்ணெய் கப்பல் தீப்பிடித்து 19 லட்சம் பரல்கள் நாசம்

(லண்டன்]

ஆபிரிக்க நகரான அங்கோலா கடல் பிராந்தியத்தில் எண்ணெய்க் கப்பலொன்று தீப்பிடித்து எரிந்து கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எண்ணெய்க்கப்பலில் ஏற்பட்ட வெடிப்பையடுத்தே கப்பல் தீப்பற்றிக் கொண்டதாகவும் இக்கப்பலில் 19 லட்சம் பீப்பா எண்ணெய் பரல்கள் ஏற்றிச்செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா, நோர்வே, சுவீடன், பிரிட்டன், ஜேர்மன், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளை சேர்ந்த 32 பேர் இக்கப்பலில் பணியாற்றுகின்றனர்.

இவ்விபத்தில் ஒருவர் மரணமானதாகவும் நான்குபேரைக் காணவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. ஏனையோர் மீட்கப்பட்டதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### ''கிளிநொச்சி மாவட்டம்

## விவசாயதுறையில் முன்னேற நடவடிக்கை எடுத்துள்ளேன்''

(கிளிநொச்சி)

''கிளிநொச்சி மாவட்ட விவசாயத் தேவைகளை நிறைவு செய்யவும்விவசாயத்துறையில் அபிவிருத்தி காணவும் தேவையான நடவடிக்கை எடுத்துள்ளேன்''.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபராகபதவிஏற்றுள்ளதிரு. கே. மாணிக்கவாசகருக்கு கிளிநொச்சி பத்திரிகையாளர் சங்கம் அளித்த பாராட்டு பிரிவுபசாரவிழாவில் பதிலுரையாற்றுகையில் அரச அதிபர் கே. மாணிக்கவாசகர் கூறினார்.

திரு. ரி. எஸ். தர்மசிங்கம் தலைமையில் கிளிநொச்சி ஞானம் மில்லில் இடம்பெற்ற இவ்விழாவில் டாக்டர் கே.வி. கே. திருலோகரமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ். அரச அதிபர் கே மாணிக்கவாசகர் மேலும் பேசுகையில்:- கிளிநொச்சி அபிவிருத்தியில், பத்திரிகையாளர்களும், பத்திரிகைகளும் அளப்பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளனர்.

மேலதிக அரச அதிபர் எஸ். அமிர்தலிங்கம், உதவி அரச அதிபர் எஸ். வேலுப்பிள்ளை விவசாயபீட பீடாதிபதி டாக்டர் நவரெத்தினராசா, கல்விப் பணிப்பாளர் கமலநாதன், கல்வி அதிகாரி பொன். சபாபதி, கொத்தணிஅதிபர் சோதிநாதன் ஆகியோரும் உரையாற்றினர்கள். (83)

## வடக்குக் கிழக்கில் 570 பாடசாலைகள் புனரமைக்கப்படவேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் கல்வி புனரமைப்புக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 60 கோடி ரூபாவை கடனடிப்படையில் வழங்கவுள்ளது.

நாடு முழுவதும் 720 பாடசாலைகள் வன்செயல்களால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மட்டும் 570 பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்படவேண்டிய நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு ஆய்வுகூட உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டது. (க)

## அகதிகள் முகாம்களுக்கு சுகாதாரவசதி

(பண்டத்தரிப்பு)

சங்கானைப்பகுதியில் வேறு இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள மக்கள் தங்கியுள்ள ஏழு அகதிகள் முகாம்களிலும் சுகாதார வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தமுகாம்களில் சங்கானை பொது சுகாதார பரிசோதகர் என். சச்சிதானந்தம் மேற்கொண்ட முயற்சியினால் அகதிகள் தொகைக்கு ஏற்றவிதத்தில் மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தொற்றுநோய்கள் பரவாதவாறு கண்காணிப்பதற்கும் சுகாதார விதிகளை அனுசரிக்கச் செய்வதற்கும் தொண்டர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு இதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. மேற்கொண்டும் அகதிகளின் நலனைக் கவனிக்க சுகநல மேம் பாட்டுக்குழுவொன்றும் சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. (72)

## இராசி பலன்

30-05-1991

வியாழக்கிழமை

துதியை முன் இரவு 9-11 வரை மூலம்.

வைகறை 5-51 வரை சித்த யோகம்.

கரிநாள்

இராகுகாலம் பகல் 1-22 முதல் 2-52 வரை.

சுபநேரம் காலை 7-22 முதல் 8-52 வரை.

மேடம்: வசதிக் குறைவு. பெண் பகை. தொழில்மந்தம். கவலை.

இடபம்: விலகி இருத்தல். தொழில் கஷ்டம். பதற்றம். குடும்ப பிரிவு.

மிதுனம்; புதிய ஸ்தானம் பணவரவு. காரியசித்தி, தான தர்மம்.

கடகம்: தூரத்து உறவு. தொழில் முயற்சி. அதிக பிரயாசம்.

சிங்கம்: வாக்குக் கலகம். கண்ணில்ரோகம், மனக்கவலை மிகுதி.

கன்னி: தொழில் பிணக்கு அமைதியற்றநிலை. ஆசாரக் குறைவு.

துலாம்: தொழில் லாபம். இனசன வருகை. மனை மாற்றம்.

விருச்சிகம்: கருத்து முரண்பாடு, தொழில் அலைச்சல். அகால போஜனம்.

தனுசு: தெய்வீக வழிபாடு. புதிய சிக்கல். குடும்ப சுகம். யோசனை.

மகரம்: ஏமாற்றம். பயண தாமதம். குடும்ப சிக்கல்.

கும்பம்: தொழில் சிறப்பு, சகோதரர் உதவி. மனைவியால் நன்மை.

மீனம்: காரிய தாமதம். வாக்குவன்மை. பெரியோர் ஆசி. புகழ்.

- ஜோஸ்யர்

## ''பேச்சுவார்த்தை நிரந்தரத் தீர்வைத் தரப்போவதில்லை''

(யாழ்ப்பாணம்)

பேச்சுவார்த்தைகள் யுத்த நிறுத்தங்கள், அகிம்சைப் போராட்டங்கள் எமக்கு நிரந்தர தீர்வைதரப்போவதில்லை. இது சிங்களவர்களுடன் நாம் வாழ்ந்து கற்றுக்கொண்ட வரலாற்றுப் பாடம்.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் உறுப்பினர் சுதன் அண்மையில் சரசாலை விக்கினேஸ்வரா பாடசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் எந்தக்கட்டத்திலும் உச்சக்கட்ட நிலையில் நின்று போராடியிருக்கின்றோம். அஹிம்சைப் போராட்டத்தில் தனது இன்னுயிரை ஈந்த தியாகி திலீபனின் மரணத்தின் பின்பு கூட இனவாத அரசுகள் தமது போக்கை மாற்றிக் கொள்ளவில்லை.

1948ம் ஆண்டு தொடக்கம் நடாத்தப்பட்ட அஹிம்சைப் போராட்டங்கள் யாவும் ஜனநாயக நாடு எனக்கூறப்படும் ஸ்ரீலங்காவின் ஆயுதப்படைகளால் அடக்கி ஒடுக்கப்பட்டதே தவிர போராட்டம் மதிக்கப்பட்டதாக வரலாறு இல்லை.

ஸ்ரீலங்கா அரசுடன் காலத்திற்குக்காலம் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது கூட எம்மை ஏமாற்றி நசுக்கி விடவே ஸ்ரீலங்கா அரசு முனைந்தது. இணக்கம்கண்ட சிலவிடயங்களில் கூட மாறாகவே அரசு செயல்பட்டது.

எமது சொந்த மண்ணிலேயே உரிமைகள் பறிக்கப்பட்டு, உயிர்கள் கொல்லப்பட்டு உடைமைகள் பறிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட சமயத்திலே இழந்தவற்றை மீட்பதற்காக நாம் ஆயுதம் ஏந்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்ககப்பட்டோம்,

எமது மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசால் திணிக்கப்பட்டுள்ள ஆயுத அடக்குமுறைக்கு எதிராக ஆயுதம் ஏந்திய ஒரு மக்கள் போராட்டம்தான் எமக்கு விடுதலை பெற்றுத்தரும் என்பதனை மக்கள் புரிந்து கொண்டு செயல்பட தொடங்கியுள்ளனர்.

தமிழ் ஈழத்தின் பல பாகங்களிலும் ஒரு மக்கள் போராட்டம் உருவாகியிருக்கிறது. ஆண்கள், பெண்கள் அனைவருமேஆயுதம்ஏந்தியுள்ளனர். அடக்கப்படும்ஒருதேசியஇனத்தின் வரலாற்று நியதி இது என்றார்.

சாவகச்சேரிவட்டப்பொறுப்பாளர் ஜெயா உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர்.

## இவர்களும் ஜே. பிக்கள்

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள அனைவரும் சமாதான நீதவான்களாக நியமனம் செய்யப்படுவர்.

மேற்படி தகவலை நீதி உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி, எஸ். ஹமீத் தெரிவித்துள்ளார். (க)

## யாழ்ப்பாணத்திலும் பரீட்சை நடாத்த வேண்டும்

(வட்டுக்கோட்டை)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ள இலங்கை கல்விச் சேவை 3-ம் தரத்திற்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குரிய திகதி இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை என இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து இப்பரீட்சைக்கு ஆயிரக்கணக்கானவர்கள் தோற்றவிருப்பதால் இப்பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடாத்தவேண்டுமென இங்குள்ள பரீட்சார்த்திகள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு ஊடாக ஜனாதிபதி கல்வியமைச்சர், பிரதமர், கல்விச் சேவை ஆணைக்குழுத் தலைவர் ஆகியோருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்திருந்தனர்.

இப்பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடாத்தவேண்டுமென்ற இக்கோரிக்கை தொடர்பாக இதுவரை எந்த வித பதிலும் கல்வியமைச்சினால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை எனவும் அநேகமாக இப்பரீட்சை கொழும்பில் நடைபெறலாம் எனவும் திரு. மகாசிவம் மேலும் தெரிவித்தார். (130)

## ராஜீவின் பெயரில் ஒரு ராகம்

(சென்னை)

சென்னை நகரில் குண்டு வெடிப்பில் பலியான ராஜீவ் காந்தியின் நினைவாக அவரது பெயரைக் கொண்ட புதிய இசை வடிவம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பிரபல இசை அமைப்பாளர் ஒருவரால் உருவாக்கப்பட்ட இந்த இசை வடிவத்தை இந்திய தொலைக்காட்சி நிறுவனம் தூரதர்ஷன் பதிவுசெய்துள்ளது.

ராஜீவ் என்றால் 'கமலம்' தாமரை என அர்த்தப்படுவதால் 'கமல் சிங்' என இந்த ராகத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது. (க)

## கிராமிய எழுச்சி விழா

[கொழும்புத்துறை)

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கூட்டாக இணைந்து எதிர்வரும் யூன் மாத நடுப்பகுதியில் கிராமிய எழுச்சி விழா நடாத்த இருப்பதாக கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வை. இராஜராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இவ்விழாவை முன்னிட்டு சங்கங்களுக்கிடையில்கவிதை, கட்டுரை, வில்லுப்பாட்டுக்கள், மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் உட்பட பனம் பாணி சேகரித்தல் போன்ற பல போட்டிகள் நடைபெற உள்ளதாக கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். [154]

## பலதும் பத்தும்

### ஒப்பனைக் கலைஞர்

தமிழ் நாடக உலகில்ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பனைக்கலையில் ஈடுபட்டு வரும் ஒப்பனைக்கலாவேந்தர் சாமுவேல் பெஞ்சமின்இதுவரையாழ்ப்பாணம், கண்டி, மட்டக்களப்பு, கொழும்பு, மன்னார் மாவட்டங்களில் மேடையேற்றப்பட்ட சுமார் 4000 நாடகங்களுக்கு ஒப்பனை செய்திருக்கிறார்.

இந்திய நாட கவிற்பனனர் வேல்நாயகர் கமலம் தம்பதிகளுக்கும் இவர் ஒப்பனை செய்த பெருமைக்குரியவர். கலையரசு சொர்ணலிங்கம், கலையரசு ஏ. ரி. பொன்னுத்துரை, குழந்தை ம. சண்முகலிங்கம், . பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் இ. பாலசுந்தரம், எம். பாலேந்திரா, போன்ற நாடகக்கலை அறிஞர்களின் நாடகங்களுக்கு ஒப்பனை வழங்கிகௌரவிக்கப் பெற்றவர்.

— ஞானி

### தமது பிள்ளைகளை

# சிற்றூர் அவை உறுப்பினர்கள்

## போராட்டத்தில் இணைக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ மக்களுக்கு முன்னோடியாக சிற்றூர் அவை உறுப்பினர்கள் தமது பிள்ளைகளை கொண்டு வந்துபோராட்டத்தில் இணைக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் மீது நம்பிக்கையும் மதிப்பும் ஏற்படும்.''

இவ்வாறு கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் அளவெட்டியில் இடம்பெற்ற வட்டஅவை, சிற்றூர் அவையினருக்கான கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூறினார்.

நெருக்கடியான காலங்களில் இவர்கள், மக்களுக்கு உற்ற நண்பர்களாக விளங்க வேண்டும். போராட்டத்தில் போராளிகளைசேர்ப்பது போல் இவர்கள் தமது பிள்ளைகளையும் போராட்டத்தில் சேர்க்க வேண்டும் என்றார்.

## தமிழ்ப் பெண் விடுதலை; தமிழர் வீடுகள் சோதனை

(கொழும்பு)

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாகத் தமிழ்நாடு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இலங்கைத் தமிழ்ப் பெண் விடுதலைசெய்யப்பட்டார்.

வசந்தி (வயது 40) என்ற பெண்மணியே, தீவிர விசாரணையின் பின் கைதுசெய்யப்பட்டவராவர்.

இதேவேளை, சென்னையில் இலங்கைத் தமிழர்களின் வீடுகள் தமிழகப் பொலிஸாரால் தீவிர சோதனை செய்யப்பட்டுவருகிறது. (க)

## ராணுவ தொகை அதிகரிப்பு அதிகாரி எச்சரிக்கை

(கொழும்பு)

இராணுவத்தினரின் தொகையை கண்டபடி அதிகரிப்பது குறித்து இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கடுமையாக எச்சரித்துள்ளார்,

அதிகளவில் படைக்கு ஆட்கள் திரட்டப்படுவதால் குறுகியகால பயிற்சியால் இராணுவத்திடையே திறமை இன்மையும், பயமும் அதிகரித்து காணப்படுகிறது.

இது பெரும் எதிர்விளைவுகளை ஏற்படுத்துமென்றும் படையின் தொகையுடன் ஒப்பிடும்போது திறமை மிகக் குறைவாக இருக்குமென்றும் அந்த அதிகாரி இராணுவ தளபதி ஹமில்டன் வனசிங்கவுக்கு தெரிவித்துள்ளார். (சி)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இன்று மாலை 4 மணிக்கு முத்தமிழ்விழா தொண்டர்களாக நியமிக்கப்பட்ட வலிகாமம் பிரிவிலுள்ள விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கு கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

### யாழ். மாவட்டத்தில்

# மூவாயிரம் பேர்

## ராணுவத்திடம் சிக்கினர்

[யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளுக்குள் 3000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அகப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அகப்பட்ட பொது மக்களில் பெரும் பாலானோர்வயோதிபர்களும், நோய்வாய்ப்பட்டவர்களுமாவர் இவர்களைவிடுவித்துதருமாறு இவர்களது நெருங்கிய உறவினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் பலதடவைகள் தொடர்பு கொண்டும் இதுவரை எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை யென்று தெரிவிக்கப்படுகிறது. (153)

## ஒய்வூதியம் பெறுதவர்க்கு பணமாக ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி கிளைகளில் இதுவரை தமது ஒய்வூதியங்களைப் பெறுதவர்கள் இன்று முதல் தங்கள் கொடுப்பனவுகளைப் பணமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

சாவகச்சேரி, சுன்னுகம், காங்கேசன்துறை. ஊர்காவற்றுறை (ஸ்ரான்லி வீதி] மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் 2-ம் கிளை [ஸ்ரான்லி வீதி) ஆகியவற்றில் இக்கொடுப்பனவு வழங்கப்படும்

## மன்னுர் நகருக்கு விரைவில் மின்சாரம்

(மன்னுர்]

மன்னுர் நகரப்பகுதிக்கு மிக விரைவில் மின்சாரம் கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகிறது.

ஆரம்பத்தில் பரீட்சாத்தமாக ஒருசில மணித்தியாலங்களுக்கு மின்சாரம் வழங்கி, பின்பு நிரந்தரமாக வழங்கப்பட இருக்கிறது.

மதவாச்சிப் பாதை ஊடாக வழங்கப்பட இருக்கும் மேற்படி மின்சாரத்துக்கான திருத்த வேலைகள் இப்பகுதிகளில் மிகவேகமாக நடைபெற்று வருகிறது. [வி)

## பொதுமக்கள் மீது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

(20 வயது). இ.ஜெகதீஸ்வரன் (25 வயது), இ. சகுந்தலதேவி (35 வயது), இ. தட்சணுமூர்த்தி (60வயது) ஆகியோரே கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளானவர்கள்

இராணுவத்தினர் பின் 2 மாணவரைத் தவிர மற்றைய இருவரையும் விடுதலை செய்தனர்.

மேலும் கிளிவெட்டிப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் கடந்த 23ம் திகதி கிளிவெட்டி கிராமத்தை சுற்றிவளைத்து இராமுப்பிள்ளை முத்துக்குமாரு என்பவரை கைதுசெய்து சென்றனர். மறுநாள் அவரை சுட்டுக் கொன்றனர்.

இதைத் தொடர்ந்து 25ம் திகதி நிலவெளி இராணுவத்தினர் தங்குவேலி கிராமத்தை சுற்றிவளைத்து 6 தமிழ் மக்களைக் கைதுசெய்தனர்.

இவர்களில் 3 பேரை விடுதலை செய்தனர். மற்றைய மூவரையும் முகாமுக்குக் கொண்டுசென்றனர். [பூ]

# ஆயுதக் கப்பல் வருவதாக மர்ம தொலைபேசி தகவல்!

(கொழும்பு)

இலங்கையின் ஏதோவொரு துறைமுகத்துக்கு வெளிநாட்டுக் கப்பலில் ஆயுதங்கள் கடத்தி வரப்படுவதாக பாதுகாப்பு அமைச்சுக்கு வந்த தொலைபேசி தகவலையடுத்து துறைமுகப்பகுதியில் தீவிரகண்காணிப்பு போடப்பட்டுள்ளது.

தம்மை இனங்காட்டாத ஒருவரே இத்தகவலைக் கூறிஞராம்.இதையடுத்துகொழும்பு, காலி, திருமலைத்துறைமுகங்களில் தீவிர கண்காணிப்பு நடைபெற்று வருகிறது.

சுங்க அதிகாரிகளுக்கும் பல உத்தரவுகள் வழங்கப்பட்டு வெளிநாட்டு கப்பல்களும் கண்காணிக்கப்பட்டு வருகிறதாம். (சி)

## ஐந்து படையணிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாகவே இந்த அணிகள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தின் கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும் மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

### யாழ். மாவட்டத்தில்

# இரண்டரை லட்சம் அகதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது 2 லட்சத்து 50 ஆயிரம் இடம் பெயர்ந்த அகதிகள் இருப்பதாக புள்ளி விபரங்கள் மூலம் தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள 20 அகதிகள் முகாம்களில் 13 ஆயிரத்து 750 குடும்பங்கள் இருக்கின்றன.

மேலும் 28 ஆயிரம்குடுபபங்கள் சிறிலங்கா ராணுவ நடவடிக்கை ஆக்கிரமிப்பினுல்இடம் பெயர்ந்து தங்கள் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கிறுர்கள்.

திருமலை, மட்டக்களப்பு, மன்னுர், வவுனியா மற்றும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த 7 ஆயிரம் அகதிக் குடும்பங்கள் யாழ். மாவட்டத்தில் வசிக்கிறுர்கள். (153)

## பரவலாக உண்ணுவிர

[1ம் பக்கத் தொடர்ச்சி)

பித்தனர்.

இந்த உண்ணு விரதம் 10 மணித்தியாலம் இடம்பெற்றது.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதையடுத்து தி. மு.க. தேசிய தொண்டர்கள் தாக்கப்பட்டது அவர்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது ஆகியவற்றை எதிர்த்தும். நடைபெறவிருக்கும் தேர்தலில் தங்களுக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரியும் இந்த உண்ணு விரதம் நடத்தப்பட்டது

இதேவேளை இந்திய தேசிய முன்னணித் தலைவர் திரு.என். ரி. ராமராவ் இன்று வியாழக்கிழமை முதல் காலவரையற்ற உண்ணுவிரதமொன்றை மேற்கொள்ளவிருக்கிறுர்.

மேற்படி உண்ணுவிரதத்தை கைவிடுமாறு முன்னுள் இந்திய பிரதமர் திரு. வி. பி. சிங் கோரிக்கைவிடுத்திருக்கிறுர்.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை சோனியா காந்தி ஏற்றுக் கொள்ளவேண்மென்று கோரி முன்னுள் எம். பி. திரு. இரா. அன்பரசு நேற்று காலை முதல் மாலைவரை உண்ணுவிரதம் இருந்தார். (க)

## ஊரடங்கு நீக்கம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம், நேற்று மாலை 6-00 மணி முதல் நீக்கப்பட்டுள்ளதாகப் மாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (பூ)

## பிரியங்காவுக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ராஜீவின் கொலையையடுத்து ஏற்பட்டுள்ள இடைவெளியை நிரப்புவதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், திருமதி சோனியா காந்தியை கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி விடுத்த கோரிக்கையை சோனியா ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## நள்ளிரவு முதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெசாக் தினத்தை முன்னிட்டு இந்நடவடிக்கை வடக்கு-கிழக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததாம்.

மீண்டும் படையினர் தாக்குதலை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ராஜீவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரைத் துப்பாக்கியால் தாக்கி கொல்ல முயன்றது தெரிந்ததே.

தமது சுகம் விசாரித்து அண்மையில் தமது தாய்க்கு திரு. ராஜீவ் காந்தி கடிதம் ஒன்றை அனுப்பியதாகவும் கூறிய இவர் ராஜீவின் கொலை ஏகாதிபத்திய வாதிகளின் சதி என்றும் கூறினுர். [பூ]

## யார் அந்தப்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் திரு. சுபோத் கான் சஹாய் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் இக்கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டார்களா என்பதை இப்போது ஒன்றும் கூறமுடியாது என்றும் கூறினுர். (பூ)

## காங்கிரஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எச்.கே.எல். பகத் தலைமையில் நடைபெற்றது.

திரு. நரசிம்மராவின் பெயரைத் திரு. அஜித்சிங் முன்மொழிய திரு. குலாம்நபி ஆஸாத்தும் திரு. ஜகநாத் பகாடியாவும் வழிமொழிய திரு. நரசிம்மராவ் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இச்கூட்டத்தில் அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் 7 மாநில முதல்வர்களும் கலந்து கொண்டனர். (பூ)

## இந்திய அரசியல்வாதி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் வந்த பி. பி. ஸி. நிருபர் திரு. கிறிஸ் மொறிஸுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்; இக்கொலையில் புலிகளுக்கு நேரடித் தொடர்போ, மறைமுகத் தொடர்போ இல்லை என்றுர்.

பழியைச் சுமத்துவதற்குச் சுலபமான ஆட்கள் புலிப் படையினர். இந்தியாவில் இருக்கும் தீவிரவாதக் குழுக்கள் எதன் மீதும் குற்றம் சுமத்தப்பட்டால் நாடெங்கிலும் வன்முறைகள் வெடித்திருக்கும். அதனுல் இதனை எம்மீது சுமத்திவிட்டனர் என்று மற்றுமொரு புலிகளின் தலைவர் கூறினுர்.

ராஜீவின் மரணம் இலங்கை

## இந்தியா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படங்கள் நேற்று 'தூரதர்சன்' ஒளிபரப்பிலும் பல தடவை காண்பிக்கப்பட்டது. (சி)

## வவுனியா

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யானுர்கள்.

இதைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின்வாங்கி முகாமை நோக்கிஓடிவிட்டார்கள்.

இத்தாக்குதலின்போது புலிகளால் பல நவீனரக ஆயுதங்கள் கைபபற்றப்பட்டன. (பூ)

குறித்த இந்தியாவின் கொள்கையில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றத்தை கொண்டு வரும் என தாங்கள் நம்பவில்லை என்றும் தேர்தலில் வென்று ஆட்சி அமைக்கும் எந்த அரசுடனும் தாங்கள் சேர்ந்து செயல்பட தயார் என்றும் புலிப்படைத்தலைவர்கள் வலியுறுத்திஞர்கள்.

ராஜீவின் மரணம் இலங்கை அரசுடன் நடக்கக்கூடிய பேச்சுவார்த்தைகளுக்கு தடங்கலாக, முட்டுக்கட்டையாக இருக்கக்கூடும் என்பதையும் புலிகள் தலைவர்கள் ஒப்புக் கொண்டதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63.ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81.